**19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,**
**எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.**

தேதி 06.07.2026

| | |
|---|---|
| சுருக்கு வழக்கு எண் | – 4177/2024 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | –எ.த.சா. 1 |
| பெயர் | –Srimeenakshi Srinivasan |
| தந்தை பெயர் | –Srinivasan |
| வயது | –28 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 06.07.2026 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம்: 1.30 pm**

**முதல் விசாரணை தொடர்ச்சி (புகார்தாரர் இணையவழி மூலமாக ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

1. நான் திருச்சியில் Sri Agencies என்ற நிறுவனத்தை நடத்திவந்தேன். செப்டம்பர் 2022 ஆம் வருடம் புகார்தாரர் நிறுவனத்தின் சென்னை Sales Team எங்கள் நிறுவனத்தை Approach செய்தார்கள். அதற்கு நாங்கள் சென்னையில் இருக்கும் நிறுவனத்திற்கு எப்படி பரிமாற்றம் செய்யமுடியும் என்று கேட்டதற்கு அவர்கள் அனைத்தையும் இணைய வழி மூலமாக செய்யலாம் என்று சொன்னார்கள். அதன் பின்னர் நான் என்னுடைய KYC ஆவணங்கள் மற்றும் இரண்டு தேதியிடாத கையொப்பம் செய்த காசோலைகளும் இரண்டு பின் தேதியிட்ட கையொப்பம் செய்த காசோலைகளை கொடுத்திருந்தேன். அதன் பின்னர் எனக்கு லோன் Sanction செய்து 16.09.2022 அன்று Sanction letter கொடுத்தார்கள். அந்த

கடிதத்தில் Point No. 7 –ல் என்னிடமிருந்து காசோலைகள் வாங்கிக்கொண்ட விவரத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அந்த கடிதத்திலேயே EMI Schedule –லும் குறிப்பிட்டு லோன் ஆரம்ப தேதி மற்றம் முடியும் தேதி சொல்லப்பட்டிருந்தது. அதன் பின்னர் நான் 11 EMI –கள் கட்டியிருந்தேன். விடுபட்ட தொகைகளை என்னுடைய தாயார் வங்கி கணக்கில் இருந்து G–pay மூலம் கட்டியிருந்தேன். ரூ. 1,55,122/– என்னுடைய தாயார் வங்கி கணக்கில் இருந்து G–pay செலுத்தியுள்ளேன். **G–pay மூலம் செலுத்தியதற்கான Screen shot பிரிவு 63(A) BSA சான்றிதழ்யுடன் எதசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

EMI செப்டம்பர் மாதம் 2024– ம் வருடம் தான் முடிவடைகிறது. ஆனால் அவர்கள் என்னுடைய காசோலையை 27.02.2024 அன்று வசூலுக்கு தாக்கல் செய்து 15.03.2024 அன்று என் மீது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். என்னுடைய காசோலையை ரூ.8,10,440/– –ற்கு போட்டு வசூலுக்கு தாக்கல் செய்து திருப்புயுள்ளார்கள். காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனக்கு எந்தவித Intimation அவர்கள் கொடுக்கவில்லை. மார்ச் மாதம் இவர்கள் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. அதனால் வழக்கு தாக்கல் செய்தபின்னரும் payment செய்து கொண்டிருந்தேன். மார்ச் 28 மற்றும் மே மாதம் payment செய்துகொண்டிருந்தேன். புகார்தாரர் நிறுவனத்தின் Collection Agent எங்களிடம் ஒருப்பக்கம் EMI தொகை வாங்கிக்கொண்டு மறுபக்கம் வழக்கும் தாக்கல் செய்துள்ளார்கள். நான் நீதிமன்றத்திற்கு வந்த பின்னர்தான் நான் காசோலையை Pre clouser –ற்காக காசோலை கொடுத்ததாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியவந்தது. நான் Pre clouser செய்யவே இல்லை. Pre closure செய்வதற்கு Authorize செய்து எந்த கடிதமும் புகார்தாரருக்கு வழங்கவில்லை.

புகார்தாரரிடமிருந்து எந்த final Notice வரவில்லை. எனக்கு Pre closure Notice –ம் கொடுக்கவில்லை நான் ஒருவருடமாக நீதிமன்றத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். புகார்தாரரின் Collection Agency என்னுடைய வீடு மற்றும் நிறுவனத்திற்கு தொடர்ந்து வந்துக்கொண்டு மிரட்டி வருகிறார்கள். நான் Collection Agency இடம் எந்த காசோலையும் கொடுக்கவில்லை. லோன் வாங்கும்போது மட்டும்தான் காசோலை கொடுத்திருந்தேன். அதனை அவர்கள் என்னிடம் தெரிவிக்காமல் வசூலுக்கு தாக்கல் செய்யமாட்டேன் என்று சொல்லியிருந்தார்கள். அவர்கள் எனக்கு ரூ. 10 லட்சம் லோன் கொடுத்திருந்தார்கள். அதில் நான் ரூ. 8,15,000/– திருப்பி கட்டியிருந்தேன் ஆனால் அவர்கள் காசோலையை ரூ. 8,10,000/– க்கு போட்டு திருப்பியுள்ளார்கள். புகார்தாரர் மிரட்டி வந்ததால் Sri Agencies என்ற நிறுவனத்தையும் நான் மூடிவிட்டேன். முழு தொகையை கட்டிய பின்னரும் Pre closure என்று சொல்லி காசோலையை அறிவிப்பில்லாமல் வசூலுக்கு தாக்கல் செய்து அறிவிப்பில்லாமல் பணத்தை கட்ட சொல்லுகிறார்கள். நிறுவனமும் மூடப்பட்டுவிட்டதால் Re payment – ற்கு Source இல்லை.

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி முடிந்த நேரம்: 2.00 pm**</u>

<u>**குறுக்குவிசாரணை :**</u>

<u>**குறுக்குவிசாரணை தொடங்கிய நேரம்: 3.00pm**</u>

**1.** நான் தற்போது என்ன வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்றால் Decors மற்றும் party orders– ற்கு ICE cream கொடுத்துவருகிறேன். Ice cream நானே தயார் செய்கிறேனா என்றால் ஆமாம். எந்த இடத்தில் வைத்து தயாரிக்கிறேன் என்றால் ஸ்ரீரங்கம் மற்றும் துரையூரில் வைத்து தயார் செய்து வருகிறேன். ஸ்ரீரங்கள் மற்றும் துரையூர் ஆகியவற்றில் இரண்டு

தொழில்சாலை outlet உள்ளதா என்றால் ஸ்ரீரங்கத்தில் உள்ளது என்னடைய வீடு ஆகும். துரையூரில் உள்ளது வேறு ஒருவருடைய Industries ஆகும். அங்கு நான் Just Job work மட்டும்தான் செய்கிறேன். அங்கிருந்து lable செய்து கொடுத்துவிடுவார்கள் அதனை நான் அந்த மண்டபத்திற்கு கொடுத்துவிடுவேன். என்னுடைய இந்த தொழிலுக்கு பெயர் எதுவும் வைத்து நடத்தி வருகிறேனே என்றால் இல்லை. துரையூரில் உள்ள Factory–க்கு பெயர் உள்ளதா என்றால் அது ஒரு சிறிய இடம் அதில் Churner மட்டும் இருக்கும். புகார்தாரர் நிறுவனத்திடம் நான் ரூ. 10 லட்சம் லோன் வாங்கியபோது என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் Sri Agency என்ற பெயரில் நான் வெளியில் இருந்து பால், தயிர், பன்னீர் வாங்கி விற்பனை செய்து கொண்டிருந்தேன். நான் வேதா பால் Agency நடத்தி வருவதாக சொல்லிதான் புகார்தாரர் நிறுவனத்திடம் லோன் கேட்டேன் என்றால் நான் விற்பனை செய்த பால் பொருட்களின் ஒரு நிறுவனத்தின் பெயர் வேதா என்று இருந்ததால் அந்த பெயர் சொன்னேன்.

2. நான் வாங்கிய ரூ. 10 லட்சம் லோனிற்கான மாதத்தவணை தவணைத் தொகை எவ்வளவு என்றால் ரூ. 59,700/– சில சமயங்களில் ரூ. 60,000/– கூட கட்டுவேன். மொத்த தவணை காலம் எவ்வளவு என்றால் 24 தவணைகள் ஆகும். நான் சொன்ன தேதியில்தான் வழக்கு காசோலை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் அவ்வாறு சொல்லவே இல்லை. நான் என்னுடைய முதல் விசாரணையில் ரூ. 8,15,000/– திரும்ப செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் வழக்கு காசோலை திருப்பபடுவதற்கு முன்னும் திருப்பபட்ட பின்னரும் எவ்வளவு தொகை கட்டியுள்ளேன் என்றால் சரியாக நினைவில்லை. அதற்காக கணக்கு பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். எதசாஆ. 2– படி நான்

எவ்வளவு தொகை கட்டியுள்ளேன் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு காசோலை திருப்பபட்ட பின்னர் ரூ. 20,000/- கட்டியுள்ளேன். காசோலை திருப்புவதற்கு முன்னர் ரூ. 7,95,000/- கட்டியுள்ளேன். எதசாஆ. 2ல் ரூ. 7,95,000/- கட்டியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான் ஆனால் ரூ. 7,95,000/- என்னுடைய வங்கி கணக்கிலிருந்து புகார்தாரர் நிறுவனம் சிலநேரங்களில் Auto Debit செய்துள்ளார்கள். சிலநேரங்களில் நான் கட்டியுள்ளேன். நான் ரூ. 8,15,000/- புகார்தாரர் நிறுவனத்திற்கு கட்டவில்லை என்றால் ரூ. 1,55,000/- G-pay மூலமும் மீதி 11 மாதத் தவணைத் தொகை Sri Agency Current account - லிருந்து கட்டியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

3. நான் வழக்கு காசோலை திருப்பபடுவதற்கு முன்னர் ரூ. 7,95,000/- கட்டவில்லை என்றாலும் ரூ. 6,70,651/- மட்டும்தான் கட்டியுள்ளேன் என்றால் இல்லை. காசோலை திருப்பபட்ட பின்னர் நான் ரூ. 20,000/- கட்டியுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் காசோலை திருப்பபட்ட விவரமே தெரியாமல் Collcetion Agent கேட்ட G-pay மூலம் கட்டினேன். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய வழக்கு காசோலை திருப்பபட்ட பின்னர் அதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபட்டு அது தெரிந்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் ரூ. 20,000/- கட்டினேன் என்றால் காசோலை திருப்பபட்ட விவரம் தெரியாமல்தான் நான் ரூ. 20,000/- கட்டியுள்ளேன். நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை, Private Notice அனைத்தும் எடுக்கப்பட்ட பின்னர் தான் மேற்படி தொகையை செலுத்தியுள்ளேன் என்றாலும் ஆனால் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.இந்த

வழக்கில் அனுப்பபட்ட சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் சரியாக ஞாபகமில்லை.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் புதசாஆ. 4 அஞ்சல் கவர் வாங்க மறுத்துவிட்டதாக திருப்பபட்டுள்ளது என்றால் நான் மறுக்கவில்லை. நான் மறுக்கவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புதசாஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். புதசாஆ.5 லோன் ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். புதசாஆ. 5 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். நான் ரூ. 8,15,000/– கட்டவில்லை என்பதால்தான் அதற்குரிய வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் ரூ. 8,15,000/– கட்டியுள்ளேன் அதற்குரிய வங்கி கணக்கு பட்டியல் உள்ளது. நான் என்னுடைய பெயரில் தனியாக Factory துரையூரில் தொடங்கிவிட்டதால்தான் ஒன்றால் எதிரி நிறுவனத்தை நான் மூடிவிட்டேன் என்றால் இல்லை. நான் இந்த வழக்கினை திசைதிருப்ப முயற்சித்துள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை முடிந்த நேரம்: 3.50pm ( மறுவிசாரணை இல்லை)**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.